**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்டுமன்னார்கோயில்.**

**சி.சி.94/2023**

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 4 ஆம் நாள் வியாழக்கிழமை

அ.சா.9

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. மாணிக்கராஜா | **ஊர்** | |
| தந்தை **பெயர்** | புண்ணியமூர்த்தி | **வட்டம்** | |
| **வயது** | 49 | **மாவட்டம்** | |
| **தொழில்** | ஆய்வாளர் | | |
| **காவல் நிலையம்** | மத்திய குற்றப்பிரிவு, ஆவடி | | |

**The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 04.09.2025 நாளாகிய இன்று திரு. M.Sam Eugine Jebakumar, B.E.,B.L., காட்டுமன்னார்கோயில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்**

1 வது எதிரி ஆஜர்.2 வது எதிரி ஆஜர் இல்லை.கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.

**முதல் விசாரணை**

நான் தற்போது மத்திய குற்றப்பிரிவு, ஆவடியில் ஆய்வாளராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு காட்டுமன்னார்கோயில் காவல்நிலைத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தப்போது கடந்த 14.08.2022 ந் தேதி பகல் 14.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்த போது நிலையம் ஆஜர் ஆகி ஷன்டன் அரசு நடுநிலை பள்ளி தலைமை ஆசிரியர், சித்திரா என்பவர் கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 400/2022 என்ற எண்ணில் இ.த.ச. 457,380 -ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உடன் சம்பவ இடம் சென்று 14.08.2022 தேதி 15.00 மணிக்கு சாட்சிகள் பாலகிருஷ்ணன், வடிவேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சாட்சிகள் சித்திரா, அறிவழகன், அசோகன், நற்சோனை, பாலகிருஷ்ணன், வடிவேல் ஆகியோர்களை விசாரித்து

தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு வழக்கின் கோப்பினை மேல்விசாரணைக்காக ஆய்வாளர் திரு. ஏழுமலை அவர்கள் வசம் ஒப்படைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

அ.சா.ஆ.1 புகாரில் எதிரிகள் பற்றிய விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் விசாரித்தவரை எதிரிகள் யார் என்று தெரியவரவில்லை. அ.சா.1 கொடுத்த தவறான புகாரை சரிவர விசாரணை செய்யாமல் வழக்கு பதிவு செய்து சம்பவ இடம் செல்லாமலும் சாட்சிளை விசாரணை செய்யாமலும் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலம் ஆகியவற்றை காவல்நிலைத்தில் வைத்தே தயார் செய்தேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னிடம் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை. நான் பணியிட மாற்றத்தில் சென்றதால் வாக்குமூலம் பெறவில்லை.

சாட்சி விசாரணை முடிந்தது. மறுவிசாரணை இல்லை.